முற்பகல் 10-15

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி நேரக் கடைகள் பிரித்துக்கொடுப்பதற்கு செலவினம் அதிகமாகும் என்பதைப்போல் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் சொல்லுவது என்னவென்றால் பல கிராமங்களில் இந்த கம்யூனல் கிளாஷ் என்று சொல்லக்கூடிய அளவுக்கு சில நலிந்த பிரிவினர்கள் சில ஊர்களுக்குச் செல்ல முடியாமல் இருக்கிறது. இந்த மாதிரி ஊர்களுக்கு நீங்கள் பார்த்து அதைப் பிரித்துத் தனிக்கடைகளாகக் கொடுப்பதற்கு ஆவன செய்யப்படுமா? அதைப்போல ரேஷன் கடைகளில் இன்றைக்கு 12 கிலோ அரிசிதான் நீங்கள் கொடுக்கிறீர்கள். ஒரு குடும்பத்தில் 5 நபர்கள் இருந்தாலும் நீங்கள் அவ்வளவுதான் கொடுக்கிறீர்கள். அத்தனை நபர்களுக்கும், இன்றைக்கு கேரளா, ஆந்திராவைப் போல அரிசி ஒவ்வொரு நபருக்கும் தகுந்தாற்போல் நீங்கள்.................(மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் தனிக் கேள்வி போடவும். இந்தக் கேள்வி ஒரு ஊரிலுள்ள ரேஷன் கடையைப் பிரிப்பது பற்றியது. பொதுவாக 12 கிலோ போடுவது, மற்ற மாநிலங்களில் இவ்வளவு கொடுக்கப்படுகிறது என்பதெல்லாம் பொது விவாதத்தில் பேச வேண்டிய விஷயங்கள். முதல் பகுதிக்கு மட்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பதுபோல், சில விசேஷ சூழ்நிலைகளினால், விசேஷ காரணங்களினால் அங்கே எல்லாக் கிராமங்களுக்கும் இணைத்து நடத்தப்படுகின்ற அந்தக் கடைகளுக்கு வர முடியாத நிலை இருக்குமானால் அந்த நிலைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் தெரிவித்தால், அதையொட்டிய சிறப்பு முடிவை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 123, திருமதி ரமணி நல்லதம்பி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

123—

பணகுடி ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடத்தைப் பழுதுபார்த்தல்.

13804— திருமதி ரமணி நல்லதம்பி:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) ராதாபுரம் தொகுதி, பணகுடி ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைச் சீர்செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பணகுடி ஆரம்ப சுகாதார நிலையத்தின் கட்டிட மேற்கூரை பழுது பார்க்கப்பட்டது. மகப்பேறு வார்டு, தொழுநோய்ப் பிரிவு கூரைகள் மாற்றப்பட்டு புதுப்பிக்கப்பட்டு, மின் இணைப்பு, பெயிண்டிங் மற்றும் வெள்ளை அடிக்கும் பணி முடிக்கப்பட்டது. மேலும் சுற்றுச்சுவர், கழிவறை, தண்ணீர் வசதி மற்றும் வெளிப்புற கேட் பழுதுபார்த்தல் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைப் போட்ட சிறிது காலத்திலேயே இந்தப் பணிகள் எல்லாம் செய்யப்பட்டு இருக்கின்றன. அதற்காக நான் இந்த அரசுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி). ஆனால் வெகுகாலமாக இயங்கி வந்த பிணப் பரிசோதனை அறை பழுது நீக்கப்படாமல் அப்படியேயிருக்கிறது. இதில் குறிப்பிட வேண்டிய அம்சம் என்னவென்றால், ஒரு இஸ்லாமியப் பெரியவர் தன்னுடைய மனைவியினுடைய நினைவாக இந்தக் கட்டிடத்தை அரசுக்குத் தந்து இருக்கிறார். அந்தக் கட்டிடம் மிகவும் சிறந்தக் கட்டிடம். இன்றைக்கு அதைக் கட்டவேண்டுமென்று சொன்னால் பல லட்சம் ரூபாய் ஆகும். அப்படிப்பட்ட ஒரு நல்ல கட்டிடத்தைச் சிதைவுபடாமல் காக்கவேண்டிய கடமை இந்த அரசுக்கு இருக்கிறது. டாக்டர்கள் உட்கார்ந்து பணியாற்றுகின்ற அந்த அறையினுடைய மேற்கூரை அதாவது சீலிங் உள்ள பகுதி மிகவும் சீரழிந்த நிலையில் இருக்கிறது. அதையும் சீர்செய்வதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 85 வருடங்கள் அந்தக் கட்டிடம் கட்டி ஆகிறது என்று இங்கே சொல்லியிருக்கிறார்கள். குறிப்பு அப்படி கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது ஒரு பகுதி பழுதுபார்த்து நல்ல முன்னேற்றம் செய்யப்பட்டிருக்கிறது. மற்றப் பகுதிகளை நிதிநிலைமைக்கு ஏற்ப படிப்படியாகச் செய்வதற்கு அரசு நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 85 ஆண்டுகள் ஆனாலும்கூட அந்தக் கட்டிடம் நல்ல நிலையில் இருக்கிறது. ஒரு குறிப்பிட்டத் தொகையை நாம் செலவு செய்வோமானால், இன்னும் பல நூறு ஆண்டுகளுக்கு அந்தக் கட்டிடம் நமக்குப் பயன்பெறும்

வகையில் இயங்க வல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பகுதியில் ஒரு கொலை அல்லது இயற்கைக்குப் புறம்பான மரணம் ஏற்பட்டு விடுமானால் பிணப் பரிசோதனைக்கு நாங்குநேரிக்குச் செல்லவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இயங்கிக்கொண்டிருந்த அந்தப் பிணப் பரிசோதனை அறையை மீண்டும் இயக்குவதற்கு, அதை நன்கு ரிப்பேர் செய்து—ஏன் இயக்கவில்லை என்று கேட்கின்றபோது மேற்கூரை இல்லையென்று சொல்கிறார்கள். பிணத்தை எல்லாம் களவு செய்து எடுத்துச் செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது; பாதுகாப்பு இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே. அந்தப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொண்டு—மேற்கூரையை எல்லாம் நன்கு போட்டு அந்தப் பிணப் பரிசோதனை அறை இயங்குவதற்கு உரிய நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 85 ஆண்டுக்காலம் என்று அந்தக் கட்டிடத்தினுடைய பெருமைக்காகத்தான் சொன்னேன். எனவே, அதைப் பழுதுபார்த்து, அதை வைத்துக்கொள்வதற்கு நிச்சயமாக அரசு முயற்சிகளை மேற்கொள்ளும். நான் ஏற்கெனவே சொன்னபடி, பிணப் பரிசோதனை அறையைச் சீர் செய்வதற்கு, நிதிநிலைமைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் தெரிவித்து இருக்கிறேன். எனவே, நிதிநிலைமைகளையெல்லாம் பார்த்து, அதற்கான உரிய நடவடிக்கைகளை, உரிய நேரத்தில் எடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 124, திரு. டி. வேலையா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

124—

அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளிடம் நுழைவுச்சீட்டுக் கட்டணம் வசூலித்தல்.

***22328*—திரு. டி. வேலையா:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

அரசு மருத்துவமனைகளில் நோயாளிகள் நுழைவுச் சீட்டுக் கட்டணம் வசூலிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு.சு.முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அத்தகைய திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

திரு. டி. வேலையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவமனைகளைப் பொறுத்தவரையில் நாளுக்கு நாள் கூட்டம்